## செப்டம்பர் - 21

**" நான் மரண இருளின் பள்ளதாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்."**
**- சங் 23 : 4**

கர்த்தருடைய மந்தையின் செம்மறி ஆடுகள் ஒரு பொல்லாப்புக்கும் பயப்படுகிறதில்லை. ஏனென்றால் கர்த்தரின் தயை அவர்களுக்கு இருக்கிறது. அவர் அவர்களோடு அவர்கள் பக்கத்திலிருக்கிறார். ஏற்கனவே சாட்டப்பட்டிருக்கின்ற மீட்கும் பொருளின் தமது தயையை அவர் காண்பித்திருக்கிறார். அவர் அவர்களோடு வாக்குதத்தின் நமது வார்த்தையிலும் அவர்களோடு கூட இருக்கிறார். அதாவது மரணம் ஜீவனின் அழிவைக் குறிக்காது என்றும், ஆனால் உயிர்தெழும் வரைக்கும் இயேசுவில் அவர்கள் ஒரு அமைதியான நித்திரையிலிருக்கிறார்கள் என்பதே வாக்குதத்தம். நம்மை நேசித்துத் தன்னுடைய விலையுயர்ந்த இரத்தத்தினாலே நம்மை கிரயத்துக் கொண்டு நம்முடைய பிரிய இரட்சகரோடு ராஜ்யத்தின் சுதந்திரத்தை பெறுவதற்கு நம்மை அழைத்திருக்கிற பெருமையானதும் பரிசுத்தமானதுமான அவருடைய நாமத்தைப் போற்றவும் புகழவும் பிரஸ்தாபம் பண்ணவும் தங்கள் ஆத்துமாக்களை அவைகளிலுள்ளிருக்கும் எல்லாவற்றோடும் அவரை நோக்கிக் கூப்பிட்டுக் கொண்டும் தங்களுடைய இருதயங்களில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம், பண்ணிக்கொண்டும் இவர்கள் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது.

**- Z ’03, 413 (R 3268)**

சாபத்தின் நிலைமையே மரண இருளின் பள்ளத்தாக்கு. இந்தப்பள்ளத்தாக்கை இருட்டாக்குகிற பாவத்திலும் வஞ்சகத்திலும், சீர்கேட்டிலும் துக்கத்திலும், உபத்திரவத்திலும், வருத்தத்திலும் வியாதியிலும், நஷ்டங்களிலும், ஏமாற்றத்திலும், செத்துக்கொண்டே சாவதினாலும் மரணத்தின் இருள் அதற்கு (மரணத்திற்கு) முன் செல்லுகிறது. பிறப்பிலிருந்து மரணம் வரை நாம் இந்த இருண்டபள்ளத்தாக்கின் ஊடே கடந்து செல்லுகிறோம். அதிகமான பெரும்பான்மையோர் பயத்திலே இதைக் கடந்துச் சென்று நம்பிக்கையின்மையில் அதன் முடிவை அடைகிறார்கள். அதன் கடுமையை தைரியமாகவும், அமைதியுடனும் சகிக்க தங்களை சாத்தியமாக்குகிற ஆசீர்வாதங்களை தேவனுடைய பிள்ளைகள் இந்தப் பள்ளதாக்கில் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை அடைகிற எந்த தீமையும் அவர்களுடைய மனுஷீகத்தை மட்டும் பாதிக்கிறது. அவர்களுடைய புது இருதயமும், மனதும், சித்தமும் பத்திரமாய் இருக்கிறது. ஏனென்றால், அவர்களுடைய சகாயரான தேவன் சகலத்தையும், அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாகச் செய்துக் கொண்டும், உயிர்தெழுதலில் எல்லா தீமைகளிலிருந்தும் நித்திய விடுதலையை அடையும் நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார். ஆகையால் இந்தப் பள்ளத்தாக்கில் இருக்கும்போது, அவர்கள் ஒரு பொல்லாப்புக்கும் பயப்படுகிறதில்லை.

**- P ’33, 147.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 3:13-15; 14:2,5,7-12,13,14,19-21; 17:13-16; 21:23-26,32,33; 38:17; சங் 3:5; ரோம 5:12,14,17; ஓசி 13:14; 1கொரி 15:21-23,26, 41-58; 1தெச 4:13-17; வெளி 1:18; ரோம 14:8; பிலி 1:21; எபி 13:14; சங் 27:1; 56:4,11; 118:6; 44:19; ரோம 8:15.

**கோபுர வாசிப்பு :** Z ’15, 90 (R 5653).

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு ஏற்கப்பட்டன? பலன் என்ன?